**இலங்கை பட்மின்டன் சங்கம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பட்மின்டன் சங்கத்தின் (''சங்கம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐங்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு , திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சங்கத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சங்கத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தேசிய போட்டிச் செலவுகளில் ரூபா 774,000 ஆன அனுசரணை வருமானம் குறைக்கப்பட்டு மிகுதிப் பெறுமதி ரூபா 637,000 ஆனது போட்டிச் செலவுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் அனுசரணை வருமானம் மற்றும் போட்டிச் செலவுகள் ரூபா 774,000 வீதம் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 1,411,000 ஆன பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 774,000 ஆன தள்ளுபடி குறைக்கப்பட்டு ரூபா 637,000 ஆன தேறிய செலவு கணக்கிடப்பட்டுள்ளது.இவ்விலைத் தள்ளுபடி கலந்துரையாடப்பட்டு பெறப்பட்ட விலையே தவிர அனுசரனையொன்று அல்ல. | சங்கத்திற்கு பெறப்பட்டுள்ள அனுசரணை வருமானம் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | பரீட்சை மீதியில் மற்றும் பிரதான பேரேட்டில் கட்டிடத் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புக் கணக்கின் பெறுமதி ரூபா 2,646,953 ஆக இருந்ததுடன் இப் பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் நிர்வாகச் செலவுகளின் கீழ் ரூபா 3,356,953 ஆக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இச் செலவுகள் ரூபா 710,000 அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | கட்டிடங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் ரூபா 2,646,953,00 ஆகும். எனினும் சுகாதாரச் செலவுகள் ரூபா 538,517.07, மெய்ட்லண்ட் மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை பட்மின்டன் சங்கத்தின் அலுவலகச் செலவுகள் ரூபா 138,983, புதிய பெட்மிண்டன் சங்க வளாகத் திறப்புச் செலவுகள் ரூபா 32,500 ஆன செலவுகள் 2020 ஆம் வருடத்தில் கட்டிடங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், இச் செலவுகள் 2021 கணக்குகளில் அலுவலகச் செலவுகளின் கீழ் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் வருடத்தின் நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 4,332,620 ஆன பெற வேண்டிய 06 கணக்குகள் 2021 திசெம்பர் 31 வரையில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | 2021 பெப்ரவரி மாதத்தில் பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் இப் பெற வேண்டிய மீதி 2021 இல் பதிவளிக்கப்பட்டுள்ளது. முன்னாள் தேசிய பயிற்சியாளர்களுக்காக விளையாட்டு அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 3,687,335 ஆன தொகையை மீளச் செலுத்துமாறு நினைவூட்டல்கள் பல தடவைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன. | பெற வேண்டிய தொகை விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் வருடத்தில் சங்கத்தினால் 04 விளையாட்டு வீரர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக சங்கத்தின் முன்னாள் தலைவரினால் செலவிடப்பட்ட ரூபா 1,200,000 ஆன விமானப் பயணச்சீட்டு மற்றும் இணைந்த படிகள் முன்னாள் தலைவருக்கு மீண்டும் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இப் பெறுமதி Badminton Asia நிறுவனத்திடமிருந்து மீள் அளிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அந் நிறுவனத்தினால் மீள் அளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகை குறுகிய காலத்திற்குள் ஆசியா பட்மின்டன் நிறுவனத்தினால் மீள் அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. | சங்கத்தினால் செலுத்த வேண்டிய செலவுகள் விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை பட்மின்டன் அரசியலமைப்பின் 10 ஆம் அத்தியாயத்தின் (ஆ) பிரிவு | நிறைவேற்றுக் குழுக் கூட்டம் மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2020 ஆம் வருடத்தில் 06 மாதங்களுக்கு நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | கொவிட் 19 தொற்று நோய் சூழ்நிலை காரணமாக பல கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அரசியலமைப்பின் தேவைப்பாட்டின் பிரகாரம் குறிப்பிட்டுள்ளவாறு நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,662,097 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 9,473,197 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 16,135,294 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 14,536,430 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இலங்கை பட்மின்டன் சங்கத்திற்கு ரூபா 32,642,524 ஆன அனுசரணை வருமானம் தனிப்பட்ட கம்பனியொன்றின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அனுசரணைப் பணத்தை பெறுவதற்காக விளம்பரப்படுத்த வேண்டிய அனுசரணை விளம்பரங்களின் அளவு குறித்து சங்கம் மற்றும் அனுசரணை நிறுவனத்துடன் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பட்மின்டன் சங்கத்திற்கு அனுசரனையாளர்களுடன் தற்போது ஒப்பந்தமொன்று காணப்படவில்லை. எனினும் இலங்கை பட்மின்டன் சங்கத்திற்கு செல்லுபடியாகும் அனுசரணையாளர்கள் தேவைப்படுகிறது. | சங்கத்திற்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சங்கத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகள் உள்ளடங்கும் விதத்தில் அனுசரணை நிறுவனத்துடன் சரியான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சங்கத்தினால் 06 மாத காலத்திற்கு 06 பயிற்றுவிப்பாளர்களை இணைத்துக் கொண்டிருந்ததுடன் அதில் 05 பயிற்றுவிப்பாளர்களின் சேவைக்காலம் 04 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய இரண்டு பயிற்றுவிப்பாளர் 05 மாத காலத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். இப் பயிற்றுவிப்பாளர்களுக்கு கொடுப்பனவுகளாக ரூபா 2,931,602 ஆனது 2020 ஆம் வருடத்தில் செலுத்தப்பட்டிருந்தது. இப்பயிற்றுவிப்பாளர் மற்றும் பயிற்சி பதவியணி இணைக்கப்படும்போது உறுதியான முறைமையொன்று பின்பற்றப்படாமை அவதானிக்கப்பட்டதுடன், இணைக்கப்பட்டிருந்த பயிற்றுவிப்பாளர்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான முறைமையொன்று சங்கத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயிற்றுவிப்பாளர்களின் செயலாற்றல், வருகை மற்றும் பயிற்சி திறன் என்பவற்றை மாதாந்த அடிப்படையில் மேற்பார்வை செய்வதற்கு இலங்கை பட்மின்டன் சங்கத்திடம் செயல் நடைமுறையொன்று உள்ளது. இம்மதிப்பீடு தேசிய பயிற்சிக் குழுவின் தலைவர் மூலம் நடாத்தப்பட்டு வருவதுடன் அவர்களது அங்கீகாரத்தின் பின்னர் மாதாந்தச் சம்பளம் வழங்கப்படுகின்றது. | பயிற்றுவிப்பாளர் மற்றும் பயிற்சி பதவியணி இணைக்கப்படும்போது மற்றும் இணைக்கப்பட்ட பயிற்றுவிப்பாளரின் செயலாறறல் மதிப்பீட்டினை ஆவணப்படுத்துவதற்கான முறைமையொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க கட்டளைகளின் iii ஆம் பிரிவு 7 xxi பிரகாரம் அரசாங்கத்தின் நிலையான பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 4,300,953 ஆன பெறுகை பணிகளுக்காக அரச பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படவில்லை. | பட்டியல் பிரகாரம் பல விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதைவிட சிறப்பாக செய்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை.**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க கட்டளைகள் iii ஆம் பிரிவு 7 xxi பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் பாதீட்டுக் கட்டுப்பாட்டு செயன் முறைகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. | தேசிய விளையாட்டு சங்க கட்டளைகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாடொன்றுக்கு ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் சங்கத்தினால் மீளாய்வாண்டிற்கான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்திற்காக பாதீடு தயாரிக்கப்பட்ருந்ததுடன் அது சங்கத்தின் உண்மையான செயல் திறனை அறவிடுவதற்கான அடிப்படையாக இருந்தது. | மீளாய்வாண்டிற்காக வருடம் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சபையினரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |